# அழகா அழகா அழகா

**ராகம் சுத்ததன்யாஸி**

**கண்ட சாபு தாளம்**

**(அம்புஜம் கிருஷ்ணா இயற்றியது)**

*பல்லவி*

*அழகா அழகா அழகா என்றழைத்துக் கை*
*தொழுது வந்தேன் திருமாலிரும் சோலை உரையும் வடி*
*(வழகா)*

*அனுபல்லவி*

*வழுவாது திருப்பதாம் தொழுதேத்தும் அன்பர்க்கு*
*அருள் வாரி சொரிந்து அவர் உள்ளம் கவரும் கள்*
*(ளழகா)*

*சரணம்*

*நடந்து நடந்து உன் ஸன்னிதி வந்தேன்*
*நாதன் உன் நற்றாள் நிழல் தாராயோ*
*நாடி நாடி உன் புகழ் கேட்டு வந்தேன் நாரணா*
*என் குரல் செவியுரக் கேளாயோ*
*அடைக்கலம் அடைக்கலம் என்றுனை அடைந்தேன்*
*அபயகரம் தந்து வினை தீராயோ*
*பாடி பாடி உனைப் போற்றிப் பணியும் எனக்குப்*
*பவழ வாய் திறந்து அஞ்சலென்று அருளாயோ*

*(continued in the next page)*

## மத்தியம காலம்

விரி ஜ்யோதி கமலமென உன் முகத்தே திகழும்
இருவிழி அருள் தேனை அள்ளி அள்ளி உண்டு
மறை புகழும் திரு மார்பில் மன்னி என்றும் உரைத்திட
மன வண்டுன் புகழ் பாட மையலுடன் உனை நாடி

✠✠✠✠✠✠✠✠✠✠✠